# <u>அவசரக்கூட்டம்</u>

2023–ம் ஆண்டு, ஜனவரி மாதம் 25ம் தேதி புதன்கிழமை காலை 11.00 மணிக்கு பள்ளிபாளையம் நகராட்சி மன்ற அரங்கில் அவசரக் கூட்டம் நடைபெறவுள்ளது. அதுசமயம் நகர்மன்றத் துணைத் தலைவர் மற்றும் மன்ற உறுப்பினர்கள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**திரு.மோ.செல்வராஜ்,**
**தலைவர்**
**பள்ளிபாளையம் நகராட்சி,**
**நாமக்கல் மாவட்டம்.**

<u>பொருள் எண்.1</u>

பள்ளிபாளையம் நகராட்சியில் மொத்தம் உள்ள 21 வார்டுகளில் 13194 குடியிருப்புகளும் 742 எண்ணிக்கை வர்த்தக நிறுவனங்களும்,494 தொழிற்சாலைகளும் உள்ளன. இப்பகுதியிலிருந்து தினசரி 11.92 மெட்ரிக் டன் திடக்கழிவுகள் உருவாகின்றன. திடக்கழிவுகளிலிருந்து பிரித்து சேகரம் செய்யும் பொழுது பெறபப்டும் மக்கும் குப்பைகளை நுண் உர செயலாக்க மையம், உணவு கழிவுகளிலிருந்து மின்சார தயாரிக்கும் பணிக்கும், மக்காத குப்பைகளை பொருட்கள் மீட்பு மையத்திற்கு சேமித்து வைத்து அரசு அனுமதி வழங்கியுள்ள சிமெண்ட் ஆலைகளுக்கு அனுப்பப்பட்டு வருகிறது. எனவே இந்நகராட்சியில் உள்ள 21 வார்டுகளில் தினசரி உருவாகும் திடக்கழிவுகளான மக்கும் குப்பை, மக்காத குப்பைகள் என தரம் பிரித்து நுண் உர செயலாக்க மையம், உணவு கழிவுகளிலிருந்து மின்சார தயாரிக்கும் பணிக்கும், மக்காத குப்பைகளை பொருட்கள் மீட்பு மையத்திற்கும் ஆகிய இடங்களுக்கு மக்கும்/ மக்காத குப்பைகளை சேகரித்து சேமித்து வைக்க போதுமான பணியாளர்களை கொண்டு தூய்மை பணிகள் செய்ய தனியார் நிறுவனத்தின் மூலம் ஒப்பந்த அடிப்படையில் துப்புரவு பணிகள் செய்வதற்கு உரிய கருத்துருவை தயார் செய்து இவ்வலுவலக கடித ந.க.எண்.1008/2022/இ1, நாள்.27.12.2022–ந் தேதி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–28 அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்பட்டது.

எனவே, பள்ளிபாளையம் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் 13194 குடியிருப்புகளும் 742 எண்ணிக்கை வர்த்தக நிறுவனங்களும்,494 தொழிற்சாலைகளும் உள்ளன.

மேற்படி பகுதியில் இருந்து உருவாகும் மக்கும் மற்றும் மக்காத குப்பைகளை தரம் பிரித்து சேகரம் செய்வதற்கு பணியாளர்கள் மற்றும் பேட்டரியால் இயங்கும் வாகனம், இலகுரக வாகனங்கள் மூலம் குப்பைகளை சேகரித்து நகராட்சியில் செயல்பட்டு வரும் நுண்உர செயலாக்க மையம் மற்றும் பொருட்கள் மீட்பு மையத்திற்கு கொண்டு வந்து ஒப்படைப்பு செய்யவும் நாள் 1—க்கு உருவாகும் குப்பையின் அளவு 11.92 மெட்ரிக் டன்னில், டன் 1—க்கு ரூ.4801.85/— வீதம் ஒரு வருடத்திற்கு 248.54/— இலட்சம் ஆகும். எனவே ஓராண்டிற்கான செலவின தொகையான ரூ.248.54/— இலட்சம் என்ற அடிப்படையில் மூன்றான்டு காலங்களுக்கு செலவினம் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை—28 அவர்களின் கடிதந.க.எண்.34638/2022 /EA2 –SWM/—9 ,நாள் 10.01.2023—ந் தேதி நிர்வாகஅனுமதி வழங்கி உத்தரவு வரபெறப்பட்டுள்ளது. மேற்படி பணிகள் செய்ய அனுமதி வழங்கியதின் பேரில் மூன்றான்டுகளுக்கு ஒப்பந்தப் புள்ளிகள் கோரி தனியார் நிறுவனத்தின் மூலம் தூய்மை பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

| Name of Municipality | Quantity of waste Generated (TPD) | Rate per Tonne (in Rs) | Estimated Base Cost per day (Rs.in.Lakh) | Estimated Base Cost per year (Rs.in.Lakh) | Applicable GST 18% and LWF 1% (Rs.in.Lakh) | Estimated total Cost per year (Rs.in.Lakh) |
|---|---|---|---|---|---|---|
| Pallipalayam Municipality | 11.92 | 4801.85 | 0.57 | 208.85 | 39.68 | 248.54 |

அலுவலக குறிப்பு.

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பள்ளிபாளையம் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பொதுசுகாதார பணிகளை மேற்கொள்ள முதலாம் ஆண்டிற்கு ஆகும் செலவின தொகை ரூ.248.54/— இலட்சத்திற்கான செலவினை தொகையினை திடக்கழிவு மேலாண்மை திட்ட நுகர்வோர் சேவை கட்டணம் (SUC), 15— வது மத்திய நிதிக்குழு Tied Grant மற்றும் நகராட்சி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண்.1008/2022/இ1

**தீர்மான எண்.1 நாள். 25.01.2023**

அனுமதிக்கப்பட்டது.